# வேத சிவாகம ஸாம்யம்

## From the
## VYASA BHARATA AGAMA SHILPA SADAS
## held at Ilayathangudi, Tamilnadu in 1962

ஆதாவபூத் த்விதா ஜ்ஞாநம் அதிகாரி விபேதத:|

பராபரேண பேதேந பதிபச்வர்த்ததர்சகம் ||

சிவப்ரகாசகம் ஜ்ஞாநம் சிவஜ்ஞாநம் பரம் ஸ்ம்ருதம் |

வேதாத்யபரவிஜ்ஞாநம் பசுபாசார்த்ததர்சகம் ||

என்பது காமிகம். சிருஷ்டியின் ஆரம்ப காலத்தில் நிஷ்கள சிவனிடமிருந்து பக்குவ அபக்குவர்களான அதிகாரிகளின் பேதத்துக்குத் தகுந்த படி பரம், அபரம் என்று இரண்டு விதமான ஞானங்கள் உண்டாயின. இவைகளுள் பதியான சிவத்தை விளக்கும் ஞானமானதால் சிவஞானமான சிவாகமங்கள் பரம் எனவும், பசு பாசங்களின் அர்த்தத்தை விளங்க வைப்பவையான வேதங்கள் அபரஞானம் எனவும் சொல்லப்படும். மேலும்,

ஸ்ருஷ்டிகாலே மஹேஸாந: புருஷார்த்தப்ரஸித்தயே |

விதத்தே விமலம் ஜ்ஞாநம் பஞ்சஸ்ரோதோபிலக்ஷிதம் ||

என்பது மிருகேந்திராகமம். முதலில் நிஷ்கள சிவத்திடமிருந்து அவபோத ரூப ஞானமே நாதரூபமாகவும், பின்பு ஸகள ரூபரான சதாசிவத்தினிடமிருந்து தந்திர வடிவமாகவும் ஆயின.

ததேகமப்யநேகத்வம் சிவவக்த்ராம்புஜோத்பவம் |

பராபரேண பேதேந கச்சத்யர்த்தப்ரதிச்ரயாத் ||

இவ்வாறு சாஸ்திரரூப ஞானத்தில் வேதாதிஞானம் அபரம், ஸித்தாந்த ஞானம் பரம் என்றும் சொல்லப்படும். இந்த ஸித்தாந்த ஞானங்களிலும் சிவபேதங்களான காமிகம், யோகஜம், சிந்த்யம், காரணம், அஜிதம், தீப்தம், ஸூக்ஷ்மம், ஸஹஸ்ரம், அம்சுமான், ஸூப்ரபேதம் என்ற பத்து ஆகமங்களும் பரம் எனவும், விஜயம், நிச்வாஸம், ஸ்வாயம்புவம், ஆக்நேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகபிம்பம், ப்ரோத்கீதம், லளிதம், ஸித்தம், ஸந்தானம், ஸர்வோக்தம், பாரமேச்வரம், கிரணம், வாதுளம் என்ற பதினெட்டு ஆகமங்களும் அபரம் எனவும் சொல்லப்பெறும். இப்படிச் சப்தரூபமான ஞானம்போலவே அவபோதரூப ஞானமும், சுத்தமார்க்க சிவ சதாசிவ ப்ரகாசக ஞானம் அபரம் எனவும், அசுத்த மார்க்க பசு மாயா ப்ரகாசக ஞானம் அபரம் எனவும் பகுக்கப்பெறும். அப்படியே தீக்ஷைகளிலும் நைஷ்டிக நிர்பீஜ சிவதர்மிணீ தீக்ஷா ஞானங்கள் பரம் எனவும், பௌதிக ஸபீஜ லோகதர்மிணீ தீக்ஷா ஞானங்கள் அபரம் எனவும் கூறப்படும். இப்படி உள்ள சிவஞானமே, சிவபேதம் காமிகம் முதலிய பத்தும், ருத்ரபேதம் பதினெட்டுமாக அமைந்து, இருபத்தெட்டு ஆகமங்களாக நிற்கும்.

ததேவ மந்த்ரதந்த்ராக்யம் ஸதாசிவமுகோத்பவம் |

ஸித்தாந்தம் காருடம் வாமம் பூததந்த்ரஞ்ச பைரவம் ||

ஊர்த்வபூர்வகுபேராக்யயாம்யவக்த்ராத் யதாக்ரமம் ||

ஸ்ரீ சதாசிவருடைய ஊர்த்துவமுகத்திலிருந்து உண்டான சிவாகமங்கள் இருபத்தெட்டும் சிவஞானம், மந்திரம், தந்திரம், சித்தாந்தம் என்ற பெயர்களை உடையவை என்கிறது காமிகாகமம்.

சைவம் பாஸுபதம் ஸோமம் லாகுலஞ்ச சதுர்விதம் |

தேஷு சைவம் பரம் ஸௌம்யம் ரௌத்ரம் பாஸுபாதாதிகம் ||

காமிகாத்யஷ்டாவிம்சஸ்ச தந்தரம் சைவமிதி ஸ்ம்ருதம் |

ததேவ ஸௌம்யமாக்யாதம் ஸித்தாந்தம் ஹி ததேவ து ||

ததந்யத் ரௌத்ரமாக்யாதம் தந்த்ரம் பாஸுபதாதிகம் ||

இந்த ஆகமங்கள் பின்னும் சைவம், பாசுபதம், ஸோமம், லாகுளம் என நான்கு வகைப்படும். அவற்றுள் சைவமாகிய காமிகம் முதலான 28 சிவாகமங்களும் ஸௌம்யம்(சாத்துவிகம்) எனவும், கீழான நான்கு முகங்களினின்றும் உண்டானவையான பாசுபதம், ஸோமம், லாகுளம், பைரவம் என்னும் நான்கும் ரௌத்ரம் (ராஜஸம்) எனவும் கூறப்படும். (ஸுப்ரபேத ஆகமம்.)

ஸித்தாந்தம் வேதஸாரத்வாத்வாதந்யத் வேதபஹிஷ்க்ருதம் |

ஸித்தாந்தே விஹிதாசாரோ வைதிகாசார உச்யதே ||

அஷ்டாவிம்சதிதந்த்ராணி ஸித்தாந்தமிதி கீர்த்திதம் |

ஸித்தாந்தாத் பரமம் ஜ்ஞாநம் நேதி சாஸ்த்ரஸ்ய நிஸ்சய: ||

காமிகம் முதலிய இருபத்தெட்டுச் சிவாகமங்களும் வேதஸாரமானதனால் சித்தாந்தம் எனவும், சித்தாந்தத்தில் சொல்லப்பட்ட ஆசாரங்கள் வைதிக ஆசாரம் எனவும் சொல்வர். இந்தச் சித்தாந்தத்தைக் காட்டிலும் உத்கிருஷ்டமானது வேறு இல்லை என்பது சாஸ்திரங்களின் முடிவு. (காமிகாகமம்.)

வேதஸாரார்த்ததம் தந்த்ரம் தஸ்மாத் வைதிகமாசரேத் |

வேதாந்தார்த்தமயம் ஜ்ஞாநம் ஸித்தாந்தம் பரமம் சுபம் ||

ஊர்த்வஸ்ரோதோத்பவம் ச்ரேஷ்டமஷ்டாவிம்சதிதந்த்ரகம் |

வேதஸாரார்த்ததம் ஜ்ஞேயமந்யதந்யார்த்தஸாதகம் ||

ஸ்ரீ ஸதாசிவத்தின் மேல்முகத்திலிருந்து உண்டான காமிகம் முதலிய இருபத்தெட்டு ஆகமங்களும் வேதசாரமான பொருளைக் கொடுப்பதாலும், வேதாந்தமான உபநிஷத்துக்களின் பொருளை உடையனவாக இருத்தலாலும், சித்தாந்தமாயும் பரஞானமாயும் இருத்தலாலும், வைதிகர்களால் ஆகமங்களில் கூறப்பட்ட ஆசாரம் அநுஷ்டிக்கத் தக்கதாகும்: ஆனதால் சிவாகம ஆசார அநுஷ்டானம் வைதிகமே. பாசு பதம் முதலிய ஏனைய சாஸ்திராநுஷ்டானம் தந்திராசாரமாகும். (மகுடஆகமம்.)

ச்ருத்யுக்தாசாரபாஹ்யத்வாதபரம் ரௌத்ரமுச்யதே |

வைதிகாசாரஸம்பந்தாத் ஸௌம்யம் ச்ரேஷ்டமிதி ஸ்ம்ருதம் ||

ரௌத்ரேண பூஜிதஸ்சாஹம் ததா ரௌத்ரபலப்ரத: |

ஸௌம்யேந பூஜிதஸ்ஸாஹம் வத்ஸ ஸௌம்யபலப்ரத: ||

வேதோக்த ஆசாரத்துக்குப் புறம்பானவை அபரம் எனவும், ராஜஸம் எனவும், வேதோக்த ஆசாரத்தோடு சம்பந்தமுடையவை பரம் எனவும் சாத்விகம் எனவும் சொல்லப்படும். காமிகம் முதலியவை சாத்விகமானதால் சிரேஷ்டம் என்பர். ரௌத்ரமான ஆகமங்களால் பூஜிக்கப்பட்டால் ராஜஸபலன்களைக் கொடுப்பேன் எனவும், சாத்விகமான பரம் என்ற சிவாகமங்கள் இருபத்தெட்டாலும் பூஜிக்கப்பட்டால் சாத்விகபலனைக் கொடுப்பேன் எனவும் ஸ்ரீ ஸதாசிவப் பெருமான் அருளியிருக்கிறார். (ஸுப்ரபேத ஆகமம். )

"அஸ்மாநமாகணம் ப்ரபத்யே" (தைத்திரீய ஆரண்யகம்), "யாவந்தோஸ்மாநோஸ்யாம் ப்ருதிவ்யாம், ப்ரதிஷ்டாஸு ப்ரதிஷ்டிதா:" (காடகம்) முதலிய வேதவாக்கியங்களால் சர லிங்கப் பிரதிஷ்டையும், ஸ்திர லிங்கப் பிரதிஷ்டையும் பொதுவாகவே கூறப்பட்டுள்ளன. சிவாகமங்களில் கர்ஷணாதி ப்ரதிஷ்டாந்தம், உத்ஸவாதி ப்ராயஸ்சித்தாந்தம் உள்ளவை வெகு விரிவாகவும் ஒவ்வொன்றுக்கும் மந்திரம், தந்திரம், கிரியை, பாவனை என்பவற்றுடனும் கூறப்பட்டுள்ளன.

"ஸோஹம்பாவேந பூஜயேத்". தான் என்னும் ஆணவநீக்கத்தோடு பூஜிக்கப்படும் தெய்வம் தானெனவே பாவித்துப் பூஜித்தல் வேண்டும் என்பதனால் பாவனா விஷயமும் காணப்படுகிறது.

அத சர்யாக்ரியாபாதம் யோகபாதம் ததைவ ச |

ஜ்ஞாநபாதம் க்ரமாச்சைவ ஸிவேந பரிபாஷிதம் ||

ஏதச்சதுர்விதம் மார்கம் ஸாலோக்யாதிபலப்ரதம் ||

என்பதனால் ஆகமங்கள், சர்யாபாதம், க்ரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என்ற நான்கு பிரிவுகளை உடையவையாகவும், அவ்வநுஷ்டானங்களை உடையவர்கள் முறையே ஸாலோக்யம், ஸாமீப்யம், ஸாரூப்யம், ஸாயுஜ்யம் என்ற ஸ்ரீ ஸதாசிவருடைய ஸ்தானங்களை அடைவார்கள் எனவும் சிவஞானபோத ஸங்க்ரஹம் கூறுகிறது.

ஜ்ஞானோத்பத்திநிமித்தம் ஹி க்ரியாசர்யாப்ரவர்த்தநம் ||

இந்த ஆகமங்களில் கூறப்பட்டுள்ளபடி க்ரியா சர்யா யோக பாதங்களின் அநுஷ்டானங்களும் ஞானமுண்டாகும் பொருட்டே ஆகும் என்கிறது தேவீகாலோத்தரம்.

ஸைவாகமோபி த்விவித: ஸ்ரௌதோஸ்ரௌதஸ்ச ஸ ஸ்ம்ருத : |

ஸ்ருதிஸாரமய : ஸ்ரௌத : ஸ்வதந்த்ர இதரோ மத : ||

ஸ்வதந்த்ரோ தஸதா ப்ரோக்தஸ் ததாஷ்டாதஸதா புந : |

காமிகாதிஸமாக்யாபி : ஸித்தஸ்ஸித்தாந்தஸம்ஜ்ஞித : ||

ஸ்ருதிஸாரமயஸ்சைவ ஸதகோடிப்ரவிஸ்தர : ||

இந்தச் சிவாகமங்கள் சிரௌதம், அசிரௌதம் என்று இருவகைப்படும். இவற்றில் வேதஸாரமானவையும், ஸ்வதந்த்ரமானவையும், சிவபேதங்களுமான காமிகம் முதலிய பத்தும், விஜயம் முதல் வாதுளம் முடிய

உள்ள ருத்ரபேதங்களான பதினெட்டும் ஸித்தாந்தம் என்னும் பெயருடன் நூறுகோடி கிரந்தங்களை உடையனவாக இருக்கின்றன.

இந்த ஆகமங்களின் உபபேதங்கள் 207 ஆகமங்களாக விரிந்துள்ளன. (வாயவ்ய ஸம்ஹிதை. )

யதுக்தமந்யஸாஸ்த்ரேஷு வித்யதே தச்சிவாகமே |

ந த்ருஷ்டம் யச்சிவஜ்ஞாநே ததந்யத்ர ந த்ருஷ்யதே ||

இதர சாஸ்திரங்களில் கூறப்பட்டவை யாவும் சிவஞானங்களான சிவாகமங்களில் கூறப்படும். இந்த ஆகமங்களில் கூறப்படாதவை வேறு சாஸ்திரங்களிலும் காணப்படவில்லை. (வாயவ்ய ஸம்ஹிதை.)

இதுபற்றியே ஸ்ரீ கண்ட சிவாசார்ய ஸ்வாமிகளும் தமது பாஷ்யத்தில், “வயம் து வேதசிவாகமயோர் பேதம் ந பச்யாம :” என்பதில் வேத சிவாகமங்களினிடையே பேதத்தைக் காணவில்லை எனவும், ஹரதத்தாசாரியரும், “வேதா : ப்ரமாணமிதி ஸங்கிரமாண ஏவ திவ்யம் ஸிவாகமமவைதி ஜநா: ப்ரமாணம்” என்பதில், “வித்துவான்களான ஜனங்கள் வேதங்களைப் பிரமாணமென்றும், திவ்யமான உங்களது சிவாகமங்களையும் பிரமாணமென்றும் கொள்கிறார்கள்” என்றும் எழுதியிருக்கிறார். அநுஷ்டானங்களிலும், “வைதிகம் து புரா க்ருத்வா தத: ஸைவீம் ஸமாசரேத்” என்ற காமிகாகமத்தின் படி சிவப் பிராம்மணர்கள் வைதிக சந்தியாவந்தனத்தை முன்பு அநுஷ்டித்துப் பின்பு சைவசந்தியை அநுஷ்டிக்க வேண்டும்.

ஓம்பூர்புவஸ்வேதி மந்த்ரேண வாரத்ரயமதாஞ்ஜலிம் |

புநஸ்தேநைவ மந்த்ரேண தஷவாரம் ஜபந் நயேத் |

ஏதத் ப்ரதிதிநம் கார்யம் த்விஜத்வாபத்திஸித்தயே ||

காயத்ரி மந்திரத்தால் மூன்று அர்க்கியம் கொடுத்துப் பின் அந்தக் காயத்ரி மந்திரத்தைப் பத்து முறை ஜபம் செய்யவேண்டும். இது பிராம்மணத்தன்மை சித்திக்கும் பொருட்டுச் செய்வது. இன்னும் பிராம்மணாதி மூன்று வர்ணத்தவர்களுக்கும் கர்ப்பாதானம் முதலிய ஸம்ஸ்காரங்களைச் சொல்லும் வீராகமத்தில், "வேதோக்தைரத மந்த்ரைஸ்ச ஸைவாஸ் ஸர்வம் ஸமாசரேத் ||" என்று வருகிறது. சைவர்களான பிராம்மண க்ஷத்திரிய வைச்யர்கள் இந்தக் கர்ப்பாதானாதி ஷோடசக் கிரியைகளை வேதோக்த மந்திரங்களாலும் செய்வதற்கு உரியவர்கள் என்பது கருத்து.

தர்மஸாதநஸம்வித்திராம்நாயாதேவ ஜாயதே |

தந்மூலத்வாத் ஸ்ம்ருதேஸ்சாபி தாப்யாமேவாபரஸ்ய ச ||

தர்மானுஷ்டான விதிகள் வேதங்களிலிருந்தும் வேதானுயாயிகளான சிவாகமங்கள், ஸ்மிருதிகள் இவற்றிலிருந்தும் அறியத் தக்கவை. இந்த ஆகமங்களின் சர்யா க்ரியா யோக ஞான பாதங்களை அநுஷ்டிக்கும் வகை பற்றிய பத்ததிகளைச் செய்விக்கிறவர்கள் பெயர்கள் வருமாறு:

உக்ரோத்தரஜ்யோதிரதோ ஸ ஸத்ய:

ஸ்ரீ ராமகண்டோபி ச வைத்யகண்ட : |

நாராயணஸ்சாபி விபூதிகண்ட :

ஸ்ரீ நீலகண்டாவபி ஸோமஸம்பு : ||

ஈஷாநஸம்புர் ஹ்ருதயாதிஸம்பு :,

விரிஞ்சிவைராக்யகயுக்மவாச்யௌ |

ஜ்ஞாநத்ரிநேத்ரோ வருணேஸ்வரௌ தா

வித்யாதயஸ்தே ஸ்யுரகோரஸம்பு : ||

இப்படிப் பதினெட்டுப் பேர்கள் ஆவதோடு இன்னும் அநேகம் பேர்கள் ஆங்காங்கு இருந்து பத்ததிகளைச் செய்வித்துள்ளார்கள், உதாரணமாக, மலையாளப் பக்கங்களில், ஈசானகுருதேவபத்ததி, தந்த்ர ஸமுச்சயம் என்பவை உண்டு. வடநாட்டில் ஸித்தாந்தசேகரம் என்ற பத்ததி ஆத்மார்த்தம் பரார்த்தம் என்ற பிரிவுகளை உடையது. அதைச் செய்தவர் காசிக்ஷேத்திரவாஸி. ஸ்ரீ விச்வநாத பூஜகர் என்பவர். அவர் அக்னிஷ்டோம யாகம் செய்தவராதலால் விச்வநாத யஜ்வா என்ற பெயர் பெற்றார். அந்த ஸித்தாந்தசேகரத்திலும், “இத்யேவம் ஸகலஸிவாகமோக்தரீத்யா ||” எனவும், தந்த்ர ஸமுச்சயத்தில் சிவப்பிரதிஷ்டா உத்ஸவங்களைச் சைவாகமோக்தமாகச் சொல்கிறேன் என்றும் வருவது காண்க. ஈசானகுருதேவபத்ததியிலும் இந்தக் காமிகாதி சிவாகமங்களை அநுசரித்தே கூறப்பட்டுள்ளன.

இந்த ஆகமங்களுள் ஸுப்ரபேதாகமத்தில் பஞ்சப்பிரம்ம மந்திரோத்தாரமும், தீப்தாகமத்தில் யஜீர்வேதத்தின் நடுநாயகமான ஸ்ரீ ருத்திராத்தியாயமும் விவரமாகக் கூறப்பட்டுள்ளன.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தில், "அம்மானே ஆகமசீலர்களுக்கருள் நல்கும்" எனவும், ஸ்ரீ மாணிக்கவாசகர், "ஆகம மாகிநின்றண்ணிப்பான் தாள்வாழ்க" எனவும் கூறினர். திருமந்திரம் சிவாகமங்களது சாரமாகும். அந்த நுலில், "வேதமோ டாகமம் மெய்யாமிறைவனூல், ஒதும் பொதுவும் சிறப்புமென்றுன்னுக" என்றுள்ளது.

"வேதநுல் சைவநூ லென்றிரண் டேநூல்கள்,

வேறுரைக்கும் நூலிவற்றின் விரிந்த நூல்கள்,

ஆதிநூ லநாதியா மவன்ற நூலிரண்டும்,

ஆரண நூல் பொது சைவமருஞ் சிறப்பு னூலாம்"

என்பதும் அறிவதற்குரியது. இன்னும், பல்லவ சக்கரவர்த்திகளால் கட்டப்பட்ட விருத்தாசலம் ஸ்ரீ விருத்தகிரீசுவராலய ஆகம மண்டபத்தில் சிவலிங்க ரூபமாக ஆகமங்கள் பிரதிஷ்டை செய்து பூஜிக்கப்பட்டு வருகின்றன.

இவற்றால், வேதங்களும் சிவாகமங்களும் சமானமேயாகும் என்பது தெளிவாகத் தெரிகின்றது.